

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் 29.08.2024 அன்று கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு வரப்பெற்றுள்ள 09 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தியை (Mobile Veterinary Clinic) பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அனுப்பி வைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ர.ராஜலட்சுமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், செ.ஸ்டாலின் குமார், எம்.பழனியாண்டி, மண்டல இணை இயக்குநர் கால்நடை பராமரிப்பு துறை மரு.கணபதிமாறன், மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், காரையூர், குரு ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் நேற்று முன்தினம் (30.08.2024) மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார். உடன் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தெய்வநாயகி, பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.சுதா அடைக்கலமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக

# சென்னையை உருவாக்கிய முதல்வர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்து - பாராட்டு!

## ஃபார்முலா கார் பந்தயத்தையொட்டி கலைஞானி கமலஹாசன் – இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் உள்ளிட்ட திரையுலகினர் வாழ்த்து!

சென்னை, செப்.1-

ஃபார்முலா - 4 கார் பந்தயம் சென்னையில் நடத்தப்படுவதையொட்டி கலைஞானி கமலஹாசன், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் உள்ளிட்ட திரையுலகினர் வாழ்த்து செய்தியில் இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக சென்னையை உருவாக்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு வாழ்த்தும், பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

**கலைஞானி கமலஹாசன்!**

இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக சென்னையை உருவாக்கியுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கலைஞானி கமல்ஹாசன் வாழ்த்தும், பாராட்டும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கமல்ஹாசன் வெளியிட்டுள்ள சமூகவலை தளப் பதிவில், "சென்னையில் நடைபெறவுள்ள ஃபார்முலா 4 கார் பந்தய திருவிழா பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்காக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக சென்னையை உருவாக்கியுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கும் தமது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

**இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான்!**

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

சென்னையில் நடைபெறவிருக்கும் ஃபார்முலா 4 தெருப் பந்தயம் ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகத் தயாராக உள்ளது, இது நாட்டிலேயே முதல் முறையாகும். அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இந்த அசாதாரண ஃபார்முலா 4 தெருப் பந்தயத்தை சென்னையில் கொண்டு வந்து இந்தியர்களுக்கு உற்சாகம் சேர்த்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

**நடிகர் தனுஷ் வாழ்த்து!**

நடிகர் தனுசும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். அந்தப் பதிவில், இந்தியாவின் முதல் ஆன் ஸ்ட்ரீட் நைட் எஃப் 4 சேம்பியன்ஷிப்பை சென்னையில் நடத்துவதற்கு வாழ்த்துகள். விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பின் கீழ் நடைபெறும் இந்தப் பந்தயம், சென்னையின் அந்தஸ்தை உயர்த்தி, இந்தியாவை ஒரு முக்கிய விளையாட்டு நிகழ்வுகளுக்கான மையமாக மாற்றும் என்று நடிகர் தனுஷ் தெரிவித்துள்ளார்.

**நடிகர் சிவகார்த்திகேயன் வாழ்த்து!**

இது குறித்து, நடிகர் சிவகார்த்திகேயன் தனது எக்ஸ் தள பக்கத்தில் ஃபார்முலா கார் பந்தயத்துக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். யுவன் இசையமைத்துள்ள கார் பந்தயம் குறித்த முழு தீம் பாடலையும் யூடியூப் லிங்க்குடன் பகிர்ந்து மகிழ்ச்சியை தெரிவித்துள்ளார். அந்தப் பதிவில், தெற்காசியாவின் முதல் ஆன் ஸ்ட்ரீட் நைட் ஃபார்முலா சாம்பியன்ஷிப்பை சென்னையில் நடத்துவதற்கு வாழ்த்துகள். இந்த முயற்சி வெற்றியடைய எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நடிகர் கார்த்தி வாழ்த்து!**

இது தொடர்பாக நடிகர் கார்த்தியும் பதிவிட்டுள்ளார். நம்முடைய சென்னையில் ஃபார்முலா கார் ரேஸ் நடைபெறுகிறது. இந்த விளையாட்டுக்கு தைரியம், திறன், துடிப்பான இளமை ஆகியவை முக்கியம். நமது துடிப்பான மெட்ராஸுக்கு இந்த கார் ரேஸ் மிகச்சிறந்த பொருத்தம். இந்த துணிச்சலான முயற்சியை கையில் எடுத்து தமிழ்நாட்டில் மோட்டார் விளையாட்டு வரலாற்றை உருவாக்குவதற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்துகள் என்று தெரிவித்துள்ளார்.

### மயிலாடுதுறை தரங்கம்பாடி வீரட்டேஸ்வரர் திருக்கோவில் குடமுழுக்கு!

# கழக ஆட்சியில் 2000 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு விழா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பெருமிதம்!

சென்னை, செப். 1-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின் இந்து சமய அறநிலையத்துறையின் 2,000-வது குடமுழுக்காக நேற்று முன்தினம் (30.08.2024) நடைபெற்ற தருமபுர ஆதீனம் நிர்வாகத்திற்குட்பட்ட மயிலாடு துறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், பரசலூர், வீரட்டேஸ்வரர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு பெருவிழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தவத்திரு ஆதீன பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்து சமய அறநிலையத் துறை, தனது ஆளுகைக்குட்பட்ட தொன்மை வாய்ந்த திருக்கோயில்களில் பழமை மாறாமல் திருப்பணிகள் மேற்கொள்ளுதல், குடமுழுக்கு நடத்துதல், திருக்குளங்கள் மற்றும் திருத்தேர் சீரமைத்தல், ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து திருக்கோயில் சொத்துக்களை மீட்டெடுத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் வருவாய் இனங்களை பெருக்குதல் போன்ற பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் நேற்றைய (29.08.2024) தினம் வரை இந்து சமய அறநிலை யத்துறையின் ஆளுகைக்குட்பட்ட 1,995 திருக்கோயில்களில் திருக்குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. இன்றைய தினம் நடைபெறும் 10 திருக்கோயில்களின் குடமுழுக்கையும் சேர்த்து அதன் எண்ணிக்கை 2,005 ஆக உயர்ந்துள்ளது.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின், இந்து சமய அறநிலையத்துறையில் 2000-மாவது குடமுழுக்காகவும், தருமபுர ஆதீனத்தின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களில்118-ஆவது குடமுழுக்காகவும் இன்று நடைபெற்ற பரசலூர் அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு நடந்தேறியிருக்கிறது. 1000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களை புனரமைத்து குடமுழுக்கு நடத்திட முதலமைச்சர் அவர்கள் இதுவரை ரூ. 300 கோடியை அரசு மானியமாக வழங்கி இருக்கின்றார்கள். அதோடு உபயதாரர் நிதியாக சுமார் ரூ.180 கோடி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிதியின் மூலம் இதுவரை ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட 36 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

இதற்கெல்லாம் காரணம் தமிழக முதல்வர் என்றாலும், இந்த குடமுழுக்கு களுக்கு, திருப்பணிக



ளுக்கு அதிகமான அளவிற்கு ஆதரவினை தந்து அனைத்து வகையிலும் உறுதுணையாக சன்னிதானங்கள் இருக்கின்றார்கள். 1,000-ஆவது குடமுழுக்கு கடந்தாண்டு செப்டம்பர் மாதத்திலும், 1,500-வது குடமுழுக்கு இந்த ஆண்டு மார்ச் மாதத்திலும் நடைபெற்றது. ஆறு மாத காலத்தில் 500-க்கும் மேற்பட்ட குடமுழுக்குகள் நடத்தப்பட்டு இன்றோடு 2005 குடமுழுக்குகள் நிறைவு பெற்றுள்ளன.

கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள ஆண்டுதோறும் தலா 1,000 என்ற எண்ணிக்கை 1,250 ஆகவும், நிதியுதவி தலா ரூ.1 லட்சம் என்பது ரூ.2 லட்சமாக உயர்த்தப்பட்டு இதுவரை 3,750 கிராமப்புற திருக்கோயில்களுக்கும் 3,750 ஆதிதிராவிடர்கள் பழங்குடி யினர் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு ரூ.150 கோடி திருப்பணி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிதியுதவி இந்த நிதியாண்டு முதல் ரூ. 2.50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட உள்ளது.

அதேபோல ஒருகால பூசைத் திட்டத்திலும், திருக்கோயிலுக்கு வழங்கப்பட்ட வைப்புநிதித் தொகை ஒரு இலட்சத்திருந்து 2 இலட்சமாக உயர்த்தப்பட்டு, தற்போது 17,000 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. அதன் அர்ச்சகர் களுக்கு முதன்முறையாக மாதந்தோறும் ஊக்கத்தொகையாக ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது.

ஒருகால பூசைத் திட்ட திருகோயில்களின் அர்ச்சகர்களின் குழந்தைகள் உயர்கல்வி பயில 400 மாணவர்களுக்கு ரூ.10,000 கல்வி உதவித்தொகையாக கடந்த ஆண்டு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு அதனை 500 மாணவர்களுக்கு வழங்கிட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, திருகோயில் திருப்பணி மற்றும் குடமுழுக்கு களுக்கும், திருவிழாக்க ளுக்கும் அதிக அளவில் முக்கியத்துவம் தந்து சிறப்பான முறையில் நடத்தி வருவதோடு, பக்தர்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றி தருவதனால் அனைத்து திருக்கோயில்களிலும் இறையன்பர்கள், பொதுமக்கள் நிறைவாக இறை தரிசனம் செய்கின்ற ஒரு நல்ல சூழ்நிலையை இந்து சமய அறநிலையத் துறை உருவாக்கி தந்துள்ளது. அதே நேரத்தில் தவத்திரு ஆதீன பெருமக்கள் ஒரு சேர இந்த ஆட்சியோடு இணக்கமாக இருந்து, பக்தி பரவசத்தோடு இந்த ஆட்சியை ஆதரிப்பதும், இது போன்ற குடமுழுக்கு விழாக்களில் பங்கேற்பதும் கடந்த காலங்களில் இல்லை. இந்த அருமையான அற்புத காட்சியால் இறைவனும் மகிழ்ச்சி அடைகிறான்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, தவத்திரு ஆதீன பெருமக்கள், இறையன்பர்கள் போற்றுகின்ற ஆன்மிக அரசாக திகழ்ந்து வருகிறது. அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டின் தீர்மானங்களை எல்லோரும் ஆதரிப்பார்கள் என்று எப்படி சொல்ல முடியும். இது ஜனநாயக நாடு அதன்படி கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். அதையும் நாங்கள் உள்வாங்கிக் கொள்கிறோம். அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு இவ்வளவு சீரோடு சிறப்போடு நடக்கும் என்று எண்ணிப் பார்க்கவில்லை. பலர் அவர்கள் வேறு வகையான கணக்கிலே இருந்தார்கள். அத்தனையையும் அடித்துசுக்கு நூறாக்கி முதலமைச்சர் அவர்களின் ஆதரவுரோடு உலகமே பாராட்டு கின்ற அளவிற்கு இந்த முருகன் மாநாடு நடைபெற்றிருக்கின்றது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### சென்னையில் வீடுகளில் நூலகம் வைத்திருப்போர்

# அரசின் விருது பெற விண்ணப்பிக்கலாம்!

## தமிழ்நாடு அரசு செய்தி வெளியீடு!

சென்னை, செப்.1-

சென்னை மாவட்டத்தில் வீடுகளில் நூலகம் வைத்திருப்போருக்கு விருது பெற விண்ணப்பிக்கலாம் என அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது வருமாறு:-

தமிழக அரசு, வீடுதோறும் நூலகங்கள் அமைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு, மாவட்டம் தோறும் புத்தகத் திருவிழாக்களை நடத்தி வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் வீடுதோறும் நூலகங்கள் அமைத்து பயன்படுத்தி வரும் தீவிர வாசகர்களை ஊக்குவிக்கும் பொருட்டு விருது வழங்கப்படும் என அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளதால், சென்னை மாவட்டத்தில் வீடுதோறும் நூலகங்கள் அமைத்துச் சிறப்பாகப் பயன்படுத்தி வரும் தனிநபருக்கு மாவட்டங்களில் நடத்தப்படும் புத்தக கண்காட்சியில் சொந்த நூலகங்களுக்கு விருது, ரூ.3,000 மதிப்பில் கேடயம் மற்றும் சான்றிதழ் மாவட்ட ஆட்சியர் தலைவர் அவர்களால் வழங்கப்படவுள்ளது.

இந்த விருதுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், தங்களது வீட்டில் உள்ள நூலகத்தில் எத்தனை நூல்கள் உள்ளன, எந்த வகையான நூல்கள் மற்றும் அரிய நூல்கள் விவரம் என்பன உள்ளிட்ட விவரங்களுடன், பெயர், முகவரி, செல்போன் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு dlochennai1@gmail.com என்ற இமெயில் முகவரிக்கும், கீழ்க்காணும் மாவட்ட நூலக அலுவலக முகவரிக்கும் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட நூலக அலுவலரால் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மயிலாடுதுறையில் இன்று இரயில் மறியல் போராட்டம்!

## குத்தாலம் பி.கல்யாணம் தலைமையில் நடைபெறுகிறது!

மயிலாடுதுறை. செப். 1

மயிலாடுதுறை ரயில் நிலையம் அருகே இரயில் மறியல் போராட்டம் குறித்த விழிப்புணர்வு பொதுக் கூட்டம் இன்று (1.9.2024 ஞாயிற்றுக் கிழமை) மாலை 4.00 மணிக்கு நடைபெறுகிறது. 1986 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்ட மயிலாடுதுறை - தரங்கம்பாடி இரயில் மீண்டும் தொடங்கி காரைக்கால் வரைக்கும் நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையை கிடப்பில் போடாமல் விரைந்து நிறைவேற்றிட வேண்டும். விழுப்புரம் தஞ்சாவூர் இரட்டை ரயில் பாதை அமைக்கும் பணியை விரைந்து செயல்படுத்தி முடிக்க வேண்டும்.

மயிலாடுதுறையில் பாரம்பரியமாக இயங்கி வந்த இரயில் பெட்டிகள் முதன்மை பராமரிப்பு மையம் மீண்டும் அமைக்க வேண்டும், மோடியால் 20.3.2024 அன்று காணொலி காட்சி மூலம் அடிக்கல் நாட்டியும், பணி தொடங்கப்படாமல் உள்ள நீடூர் ரயில்வே மேம்பாலம், மாப்படுகை ரயில்வே மேம்பாலம், சீர்காழி கொண்டல் சந்திப்பில் மேம்பாலம் கட்ட வேண்டும், கொள்ளிடம் சந்திப்பில் மேம்பாலம் கட்ட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெறும் விழிப்புணர்வு பொதுக்கூட்டத்திற்கு கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் தலைமை தாங்குகிறார்.

இரயில் பயணிகள் சங்க தலைவர் எஸ்.மகாலிங்கம் முன்னிலை வகிக்கின்றார். மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா வரவேற்கிறார். பொதுக் கூட்டத்தில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஆ.ராசா, கனிமொழிகருணாநிதி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன், அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், அன்பில் மகேஷ்பொய்யாமொழி, எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன், நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், கலாநிதிவீராச்சாமி, தங்க.தமிழ்செல்வன், சி.என்.அண்ணாதுரை, தயாநிதிமாறன், தமிழச்சி தங்கபாண்டியன், டி.எம்.கதிர்ஆனந்த், ஜி.செல்வம், அருண்நேரு, பிரகாஷ், ஆ.மணி, ராணி ஸ்ரீகுமார், கே.சுப்பராயன், துரைவையாபுரி, எம்.எஸ். தரணிவேந்தன், கணபதி ப.ராஜ்குமார், ச.முரசொலி, தே.மலையரசன், வி.எஸ். மாதேஸ்வரன், வி.செல்வராஜ், எஸ்.வெங்கடேசன், தொல்.திருமா வளவன், எஸ்.வைத்திலிங்கம், கே.கோபிநாத், என்.கே. விஷ்ணு வரதன், மாணிக்கம் தாகூர், விஜய்வசந்த், சச்சிதானந்தம், ரவிக்குமார், சசிகாந்த்செந்தில், ஜோதிமணி, கார்த்தி சிதம்பரம், ராபர்ட் புரூஸ், ப.சிதம்பரம், சு.கல்யாண சுந்தரம், திருச்சி என்.சிவா, என்.ஆர்.இளங்கோ, இரா. கிரிராஜன், கனிமொழி என். வி.என்.சோமு, வைகோ. ஜி. கே.வாசன், மு.சண்முகம், பி.வில்சன், ப.செல்வராஜ், கே.ஆர்.என்.ராஜேஸ்குமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், ஏ.கே.எஸ்.விஜயன், மணி சங்கர்அய்யர், இளங்கோவன், பி.வி.ராஜேந்திரன், செ.இராம லிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் நிவேதா எம்.முருகன், கோவி.செழியன், எம்.பன்னீர்செல்வம், துரை.சந்திரசேகரன், கோ. அய்யப்பன், எஸ்.ராஜ்குமார், சாக்கோட்டை அன்பழகன், எச். ஜவாஹிருல்லா, நீலமேகம், பாண்டியன், நாகைமாலி, திருமுருகன், சிவா, டி. வேல்முருகன், பூண்டி கே. கலைவாணன், எம்.நாஜிம், முஹம்மதுஷ நாவாஸ், சத்திரபிரியங்கா, தியாகராஜன் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.

முடிவில் இரயிலடி பகுதி வியாபாரிகள் சங்க செயலாளர் ஆர்.சுந்தர் நன்றி கூறுகிறார்.



புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கல்லாக்கோட்டை ஊராட்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று முன்தினம் (30.08.2024) வழங்கினார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், கந்தர்வக்கோட்டை ஒன்றியக்குழுத் தலைவர் கார்த்திக் (எ) இரா.ரெத்தினவேல், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கடலூர் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.ஜி.எஸ்.டி.சரத் – நிவேதிதா ஆகியோர் திருமண விழா புதுவை அருகே உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்தத் திருமண விழாவில் தி.மு.க. இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைப்பதற்காக சென்னையில் இருந்து கிழக்கு கடற்கரை சாலை வழியாக காரில் சென்றார். அப்போது அவருக்கு விழுப்புரம் மாவட்ட எல்லையான மரக்காணம் இ. சி.ஆர் சாலை அருகில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் தி.மு.க.வினர் சிறப்பான வரவேற்பு அளித்தனர். இதில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேது நாதன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா,விழுப்புரம் வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய சேர்மன் தயாளன், துணைச் சேர்மன் பழனி, மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.